# பெண்ணிய நோக்கில் அம்பையின் சிறுகதைகள்

**இ.மரிய செல்வி**
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

Open Access

Manuscript ID: BIJ-SPL3-JAN26-MD-110

Subject: Tamil

Received : 02.09.2025
Accepted : 13.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si3.26.Jan110

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்கள் அந்தந்த கால சமுதாயத்தைப் பிரதிபலிப்பவையாக உள்ளன. அத்தகைய இலக்கியங்களில் பெண்கள் முதன்மை இடம் பெறுகின்றனர். பெண் படைப்பாளர்களும் அவர்களின் வழி பெண்ணியம் குறித்த சிந்தனைகளைப் பதிவு செய்கின்றனர். பெண்ணியம் என்பது ஆணிற்கு இணையான சுதந்திரத்தை அடைவது மற்றும் பெண்கள் தனக்கு கிடைக்காத சுதந்திரத்தையோ அல்லது தவறவிட்ட உரிமைமையோ மீட்டெடுப்பதே பெண்ணியம் ஆகும். பெண்களின் வளர்ச்சியில் தான் இச்சமூகத்தின் வளர்ச்சியும் அடங்கியுள்ளது. பெண்களின் உரிமைகளைக் காப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பல இயக்கங்களும் பல பெண்ணிய எழுத்தாளர்களும் குரல் கொடுத்து வருகின்றனர். அம்பை அவர்களின் **சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை** எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளின் வாயிலாக பெண்ணியச் சிந்தனைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்: பெண்ணியம், சுதந்திரம், உரிமை, வாழ்க்கைத்தரம், மேம்படுத்துதல்**

## முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலைப் பிரதிப்பலிக்கின்றன. அவற்றுள் புத்திலக்கியங்கள் மக்களின் எதார்த்தங்களை எடுத்துரைப்பதாக உள்ளன. பெண்களின் வளர்ச்சியில் தான் இச்சமூகத்தின் வளர்ச்சியும் அடங்கியுள்ளது. பெண்களின் உரிமைகளைக் காப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பல இயக்கங்களும் பல பெண்ணிய எழுத்தாளர்களும் குரல் கொடுத்து வருகின்றனர். அம்பை தம் படைப்புகளில் பெண்களின் நிலைப்பாட்டினை மாற்ற முயன்றுள்ளார். அம்பை அவர்களின் **சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை** எனும் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளின் வாயிலாக பெண்ணியச் சிந்தனைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

பெண்ணியம் என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாகும். பெண்ணியம் என்பதற்கு முனைவர் இரா.பிரேமா அவர்கள்,

> **Feminism என்ற ஆங்கிலச் சொல் Femina என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். Femina என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள (having the qualities of female) என்பது பொருளாகும்**[1]

என்று விளக்கமளிக்கிறார்.

பெண்ணியம் என்பதற்கு பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றனர். அவ்விளக்கங்களுக்கிடையே வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அவை பாலியல் சமத்துவம் என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. பெண்ணியம் என்பதைத் தத்துவம், இயக்கம், கோட்பாடு என்ற நிலையில் தனித்தனியாக

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

விளக்கினால் அவற்றின் முழு வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகிறது.

**அம்பையின் சிறுகதைகளில் பெண்ணியம்**

அம்பை பெண் படைப்பாளராக தன் படைப்பில் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களை பதிவுசெய்துள்ளார். அவர் படைத்த சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை சிறுகதைத் தொகுப்பில் தான் சமுதாயத்திற்குச் சொல்ல நினைத்த பெண்ணியம் சார்ந்த பதிவுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

- பெண்கல்வி
- தன் இலட்சியத்தை அடைய துணிதல்
- சமுதாயத்திற்காகக் குரல் கொடுத்தல்
- பெண் தொழிலாளர்களுக்கான உரிமைகள்
- பெண்களின் பலம்
- பல்வேறு துறைகளில் பெண்கள்
- குடும்பப் பொருளாதாரத்தில் பங்கெடுத்தல்
- பாலியல் வன்கொடுமை
- விதவை மறுமணம்
- ஆணாதிக்கம்

போன்ற பெண்ணியச் சிந்தனைகள் இடம்பெறுகின்றன.

**பெண்கல்வி**

ஒரு ஆண் கல்விகற்றால் அது அவனுக்கு மட்டும் மேன்மையைத் தரும். ஒரு பெண் கல்வி கற்றால், தான் மட்டுமின்றி தன் குடும்பத்தையும் சமுதாயத்தையும் மேம்படுத்துவர். பெண்கல்வியின் மேன்மையை உணர்ந்த பாரதிதாசன்,

> **கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம் அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை**
> **கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி அங்கே நல்லறி வுடையமக்கள் விளைவது நவிலவோ நான்**[2]

என்று பெண்கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றார்.

**சிங்கத்தின் வால்** என்னும் சிறுகதையில் அம்பை பெண்கல்வியின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

> **மிகவும் சின்ன வயதில் தாத்தாவை இழந்து ஒரு சிற்றூரில் தன் தாயுடன் பலர் வீட்டில் வேலை செய்து பிழைத்துக் கொண்டிருந்தவளை கல்வியின் பக்கம் நடத்திக் கொண்டு வந்தது அவர்கள் ஊரில் இருந்த ஒரு தமிழ் வித்வான்தான்.**
>
> **(சி.க.ஒ.ப.ப.ப.130)**

என்ற வரியின் மூலம் பெண்கல்வியின் இன்றியமையாமை உணரமுடிகிறது. அம்பை தன் படைப்பில் படைக்கும் அனைத்து பெண்களும் கல்வியறிவு பெற்றவராக இந்த சமுதாயத்தில் பல்வேறு துறைகளில் பணிபுரிபவர்களாகப் படைத்துள்ளதைக் காணலாம்.

**தன் இலட்சியத்தை அடைய துணிதல்**

பெண்கள் இன்றைய காலக்கட்டத்தில் பல்வேறு துறைகளிலும் தங்களது சாதனைகளைப் படைத்து வருகின்றனர். அவ்வாறு சாதனை புரிந்த பெண்கள் அனைவரும் தங்களுக்கென்று ஒரு இலட்சியத்தைக் கொண்டு பயணித்ததால் மட்டுமே அவர்களால் உயர முடிந்தது. பெண்களின் வளர்ச்சியில் தான் சமுதாயத்தின் வளர்ச்சியும் அடங்கியுள்ளது. அம்பை அவர்கள் தம்முடைய **பயணம் 21** என்ற சிறுகதையில் காமும்மா என்ற பாத்திரத்தின் மூலம் இலட்சியத்தை அடைய துணியும் பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

> **மேடையில் ஆடக்கூடாது என்று தடுத்த உயர்மட்டக் குடும்பத்துக் கணவனை விட்டுவிட்டு வயிற்றில் மூன்று மாதக் குழந்தையுடன் வெளியேறியவள். தன்னிச்சைப்படி ஆடியவள்.**
>
> **(சி.க.ஒ.ப.ப.பக்.32, 33)**

என்ற வரிகளின் மூலம் தன் இலட்சியத்தை அடைவதற்காக குடும்பம் என்ற அமைப்பில் இருந்து வெளிவந்து சாதிக்கும் பெண்ணினை அடையாளப்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

**சமூகத்திற்காக குரல் கொடுத்தல்**

மனிதன் சமுதாயத்தில் ஒன்றிணைந்து வாழ்கின்றான். இதில் ஆண், பெண் என்ற வேறுபாடு கிடையாது. ஆனால் சமுதாயத்தில் பெண்களை வலிமையற்றவர்களாக அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்காமல் பெண்ணை ஆணைவிட எல்லா வகையிலும் தாழ்ந்தவளாக பார்க்கக் கூடியநிலை உள்ளது.

> **ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதனும் கொண்டிருக்கும் உறவைத்தான் சமூகம் என்பர்.**[3]

என்று மு.வரதராசனார் குறிப்பிடுகின்றார். இத்தகைய சமுதாயத்தில் பெண்கள் சமுதாய பிரச்சினைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பது முக்கியமான ஒன்றாகும். பெண்கள் தங்களின் உரிமைகளை முன்னிலைப்படுத்தவும், சமத்துவ சமூகத்தை உருவாக்கவும் தங்கள் குரலை தைரியமாக வெளிப்படுத்துவதன் மூலமே வளமான சமுதாயம் உருவாகும். எனவே தான் அம்பை தனது **பயணம் 21** எனும் சிறுகதையில் சமுதாயத்திற்காக குரல்

கொடுக்கும் பெண்ணாக காமுக்காவைப் படைத்துள்ளார்.

> **அவன் நவீன சமூகத்தின் பிரச்சனைகளை மையமாக்கிச் செய்த நாட்டிய நாடகங்களை மனத்தில் கொண்டு, ஒரு கூட்டம் கூட்டி விருது வழங்கிவிட்டன. அவர்கள் தந்த ஊக்கத்தில் தான் அவள் ரயா மற்றும் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் போனாள் என்று சொல்ல மறக்கவில்லை. இந்திரா காந்தி அவசரகாலப் பிரகடனம் செய்த போது எதிர்த்தக் கலைஞர் என்று புகழ்ந்தன**
>
> **(சி.க.ஒ.ப.ப.ப.32)**

என்ற வரிகளின் மூலம் சமூகத்திற்காக குரல் கொடுக்கும் பெண்ணைப் பற்றியும் அவரை ஆதரிக்கும் கூட்டமும் அதனால் அவர் தொடர்ந்து சமுதாயப் பிரச்சனைகளை எதிர்க்கும் குரலாக விளங்குவதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் **பயணம் 22** என்ற சிறுகதையில் பெண்கள் எவற்றைப் பற்றியெல்லாம் பேசவேண்டியுள்ளது என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

> **இந்தியப் பெண்கள் குடும்பத்தில் வன்முறை மற்றும் ஒடுக்கப்படுவது குறித்து முக்கியமாகப் பேசுவதோடு பாதுகாப்பில்லாத நகரங்கள், பெண்சிசுக்கொலை, வரதட்சிணைக் கொடுமை, சாதிக்கொடுமை இவற்றைப் பற்றியே பேசவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அவை பேச வேண்டிய விஷ்யங்கள் தாம்.**
>
> **(சி.க.ஒ.ப.ப.பக்.158,159)**

என்ற வரிகளின் மூலம் பெண்கள் இச்சமுதாயத்தில் பெண்சிசுக்கொலை, வரதட்சிணைக்கொடுமை, சாதிக்கொடுமை இவற்றிற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

### பெண் தொழிலாளர்களுக்கான உரிமைகள்

இன்றையக் காலக்கட்டத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் பணிபுரிகின்றனர். ஆனால் அவர்களுக்கு ஆண்களுக்குச் சமமான உரிமைகள் வழங்கப்படுவதில்லை. தொழிலிடங்களில் பெண்களுக்கு பாதுக்காப்பான சூழல், சமஊதியம் வழங்கப்படல் போன்றவை அவசியமானதாகும். அம்பை தம்முடைய **சாம்பல் மேல் எழும் நகரங்கள்** எனும் சிறுகதையில் பெண் தொழிலாளர்களுக்கான உரிமைகளைப் பட்டியலிடுகிறார். இதனை,

> **காம்மு தன் சம்பளத்தையும் கூறினாள். மும்பாய் வழக்கப்படி பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல், வீட்டைக் மூட்டி மெழுகுதல் என்ற மூன்று வேலைகளுக்கென்று இருக்கும் சம்பளத்தைக் கூறிவிட்டு, சமைப்பதற்கு அதிகச் சம்பளம் கேட்டாள். ஆண்டுக்கு ஒரு முறை ஓய்வு. பண்டிகை நாட்களில் விடுமுறை. வீட்டு வேலை செய்யும் பெண்களுக்கான சங்கம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அது நிர்ணயித்த விதிகளின் படிதான் சம்பளம் கூட சில நிபந்தனைகளை வீட்டு வேலை செய்பவர்கள் விதித்தார்கள். குளிர்பதனப் பெட்டியில் வைத்துச் சாப்பாட்டைத் தரக்கூடாது. இரண்டு வேளை சாய் தர வேண்டும். தீபாவளிக்கு ஒரு மாதச் சம்பளம் போனஸீம் புடைவையும். ஆண்டுக்கொருமுறை சம்பளத்துடன் கூடிய பத்துப் பதினைந்து நாட்கள் லீவு அவரவர் கிராமங்களுக்குப் போக.**
>
> **(சி.க.ப.ப.பக்.26, 27)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

### பெண்களின் பலம்

சமுதாயத்திலும் குடும்பத்திலும் பெண்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். மனதளவில் மட்டுமின்றி உடலளவிலும் பெண்கள் பலமுடையவர்கள். இவர்களைச் இச்சமூகம் மென்மையானவள், பொறுமையானவள், அன்பானவள் என்ற வார்த்தைகளால் பலமற்றவர்களாக அடையாளப்படுக்கின்றது.

அம்பை தம்முடைய **வீழ்தல்** என்னும் சிறுகதையில் பெண்களின் பலம் குறித்து எடுத்துக்கின்றார்.

> **தாடை, பற்கள், தோள்பட்டை, கைகால், தொடை எல்லாம் முறிந்து பொடிந்து போகலாம். ஆனால் முதுகெலும்பு முறியக் கூடாது. அப்போதுதான் தெரியும் அவள் முதுகெலும்பின் பலம். பெண்களைப் பொறுத்தவரை அது காலாவதியாகாத ஒன்று என்று.**
>
> **(சி.க.ஒ.ப.ப.ப.42)**

என்ற வரிகளின் மூலம் பெண்களின் பலம் குறித்துத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

### பல்வேறு துறைகளிலும் பெண்கள்

இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சாதித்து வருகின்றனர். இவற்றை படைப்பாளர்கள் தங்களது படைப்புகளில் பதிவுசெய்கின்றனர். அம்பை தன் கதைகளில் பல்வேறு துறைகளில் பயணிக்கும் பெண்கள் குறித்து பதிவு செய்துள்ளார்.

**அவள் கல்லூரி தாதர் அருகில் இருந்தது. அந்த ஆண்டுதான் கல்லூரி முதல்வராக பதவி உயர்வு கிடைத்திருந்தது.**

**(சி.க.ஒ.ப.ப.ப.25)**

**அந்தக் கட்டடத்தில் ஐந்து வீடுகளில் வேலை செய்தாள்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.26)**

**தன்னிச்சைப்படி ஆடியவள் (சி.க.ஒ.ப.ப.ப.33)**

**உயர் அதிகாரியாக இருந்த அப்பாவும் பள்ளி ஆசிரியையான அம்மாவும் நடுத்தரக் குடும்பத்தின் வாழ்க்கைமுறையை ஒட்டித்தான் வாழ்ந்தனர்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.49)**

**வேறு எங்கிருக்கும் என்று யோசித்தபோது தான் குதிரைக்காரி நினைவுக்கு வந்தாள்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.117)**

**சென்னையில் பேராசிரியராக இருந்த பாட்டி வந்தபோதுதான் அவள் ஒரு விசேஷ மனுஷியாக மாறினாள்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.123)**

**கணினிப் பயன்பாட்டுத்துறையில் உள்ள அவள் இயற்பியலில் ஒரு புரட்சி ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கப் போகிறாள்.**

**(சி.க.ஒ.ப.ப.ப146)**

**எம்மா ஒரு தையல்காரி. (சி.க.ஒ.ப.ப.ப.151)**

**இந்தியாவில் ராணிகள் ஆண்டிருக்கிறார்கள்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.160)**

**அம்மா கூலிக்குத் தைத்த தையல்காரி**

**(சி.க.ஒ.ப.ப.ப.160)**

**கேரளம், மங்களூர் போகிற இடங்களிலிருந்து நிறையப் பெண்கள் கன்யாஸ்திரீயாக வாழ வருகின்றனர்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.161)**

என்ற வரிகளின் மூலம் நாட்டை ஆண்ட பெண்ணரசிகளாக, பள்ளி, கல்லூரி ஆசிரியராக, கல்லூரி முதல்வராக, வீட்டுவேலை செய்யும் தொழிலாளராக, குதிரையேற்றம் செய்பவளாக, கணினி பயன்பாட்டியல் துறையில் பணிபுரிபவளாக, தையல்காரியாக, கன்யாஸ்திரீயாக என பலத்துறைகளில் பயணிக்கும் பெண்களின் நிலைக் குறித்து அறியமுடிகிறது.

**குடும்பப் பொருளாதாரத்தில் பங்கெடுத்தல்**

மனித வாழ்வில் ஒரு குடும்பத்தின் பொருளாதாரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

**பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை** [4]

என்கிறது குறள். ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்தில் பெண்கள் பங்கெடுத்தல் என்பது குடும்பத்தின் நலன்களுக்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அவசியமான ஒன்றாகும். பெண்கள் குடும்பப் பொருளாதாரத்தில் பங்கெடுப்பதால் குடும்பத்தின் பொருளாதாரம் உயர்கின்றது, தன்னம்பிக்கை வளர்கிறது, சமுதாயத்தின் பொருளாதாரமும் உயர்கின்றது.

**சாம்பல் மேல் எழும் நகரம்** மற்றும் **சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை** போன்ற சிறுகதைகளில் பொருளாதாரத்தில் பங்கெடுக்கும் பெண்களின் நிலைக்குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

**அவள் கல்லூரி தாதர் அருகில் இருந்தது. இந்த ஆண்டுதான் கல்லூரி முதல்வராக பதவி உயர்வு கிடைத்திருந்தது. குமாரின் கம்பெனி கோட்டைப் பகுதியில் இருந்தது. சரக்குக் கப்பல் கம்பனி. அவனுக்கும் பதவி உயர்ந்திருந்தது. இவர்கள் வீட்டுக்குக் கூடுதலாகவேத் தொகைக் கிடைக்கும் என்றார்கள். சேமிப்பிலிருந்தும் வங்கிக் கடன் வாங்கியும் வரும் பணத்தை அந்தத் தொகையுடன் சேர்த்து லோயர் பரேலில் புதிதாகக் கட்டப்படும் அடுக்குமாடிக் கட்டங்களில் ஒரு வீட்டை வாங்க முடியும்.**

**(சி.க.ஒ.ப.ப.ப.25)**

**அவன் அம்மா குடும்ப வருமானத்தைப் பெருக்க இட்லிக் கடை வைத்திருந்தார். ஸயான் கொலிலாடா வந்ததும் மசாலாப் பொடிகள், வடகங்கள், ஊறுகாய் என்று வியாபாரம் சற்று மாறியது.**

**(சி.க.ஒ.ப.ப.ப.49)**

என்ற வரிகளின் மூலம் பெண்கள் குடும்பப் பொருளாதாரத்தில் பங்கெடுப்பதால் அவர்களின் குடும்பம் அடுத்தக்கட்ட வளர்ச்சியை அடைவதைக் காணமுடிகிறது.

**பாலியல் வன்கொடுமை**

பாலியல் வன்கொடுமை என்பது ஒருவரை அவரின் அனுமதியின்றி தொடுவதும் அவரைக் காயப்படுத்துவதும் ஆகும். இன்றைய சமுதாயத்தில் சிறுகுழந்தைகளும் பெண்களும் பாலியல் கொடுமைக்கு உள்ளாகின்றனர். இச்சமுதாயத்தில் பலர் பெண்களை ஒரு பொருளாக மட்டுமே பார்க்கின்றனர்.

**ஒரு பெண்ணின் உடல், மனது, கண்ணியத்தோடு வாழ்வதற்கான மனித உரிமைகள் ஆகியவற்றின் மீது தொடுக்கப்படும் வன்முறைத் தாக்குதலே வன்புணர்ச்சி.**[5]

என்று மைதிலி சிவராமன் எடுத்துரைக்கின்றார்.

ஒரு ஆண் பெண்ணாக இருந்தால் மட்டுமே அவளின் வலிகளை உணர முடியும் என்பதை உணர்த்த அம்பை தம்முடைய **பொய்கை** என்னும் சிறுகதையில் ஒரு ஆணை பெண்ணாக மாற்றி பெண்களின் வலிகளையும் பாலியல் வன்கொடுமையால் பெண்கள் படும் துன்பங்களையும் எடுத்துரைக்கின்றார். இதனை,

> **இரவில் பேனா அளவில் இருந்த டார்ச்சுடன் சிறுநீர் கழிக்கச் சற்றுத் தள்ளியிருந்த மரங்கள் அடர்ந்த இடத்துக்குப் போன போது தான் அது நேர்ந்தது. ஒரு பெண் அமர்ந்து தான் சிறுநீர் கழிக்க முடியும் என்று அவன் உடல் உணர்த்தியது. டார்ச்சை வாயில் கவ்வியபடி பான்ட்டைக் கழற்றி அமர்ந்து எழுந்தபோது அவன் வாயிலிருந்து டார்ச் கீழே விழுந்தது. பின்னாலிருந்து யாரோ இறுக்குவது தெரிந்தது. யார் என்று தெரியவில்லை. வாய் மூடப்பட்டது. உடலைக் கசக்கியும் நசுக்கியும் கடித்தும் அழுத்தியும் குத்தியும் அடித்தும் குலைத்தது இரு கைகளா பல கைகளா என்று தெரியவில்லை. மாறி மாறி அவை அவன் மேல் ஊர்ந்தன. ஊர்ந்தவாறே வலியேற்றின. இதுவரை அறியாத வலியை தொடை இடுக்கில் உணர்ந்ததும் கால்களை உதறி எழ முயன்றான் உணர்விழந்தான்.**
>
> **(சி.க.ஒ.ப.ப.ப.97)**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**விதவை மறுமணம்**

விதவை மறுமணம் என்பது கணவனை இழந்த பெண் மீண்டும் திருமணம் செய்து கொள்வதாகும். ஒரு ஆண் தன் மனைவியை இழந்தால் உடனே திருமணம் செய்து வைக்கும் இச்சமூகம். ஒரு பெண் தன் கணவனை இழந்தால் விதவை என்ற பெயரைச் சூட்டி அவளை பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்குகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் விதவை திருமணச் சட்டம் இருந்தபோதும் எந்த ஆணும் ஒரு விதவைப் பெண்ணைத் திருமணம் செய்ய முன்வருவதில்லை. அம்பை தன் சிறுகதைகளின் விதவை பெண்களுக்கு திருமணம் செய்வித்து சமுதாயத்தில் ஒரு மாறுதலை ஏற்படுத்த எண்ணுகின்றார்.

> **கணவனை இழந்த மகளிர்க்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை வேண்டும்.**[6]

என்கிறார் இரா.பிரேமா. விதவை மறுமணம் குறித்து அம்பை **சிங்கத்தின் வால்** என்னும் சிறுகதையிலும் **இரண்டு வெற்று நாற்காலிகள்** என்ற சிறுகதையிலும் எடுத்துரைக்கின்றார்.

> **அவரிடம் பயின்ற இன்னொரு மாணவனைத் தான் பாட்டி இரண்டாம் முறை மணந்து கொண்டாள்.**
>
> **(சி.க.ஒ.ப.ப.பக்.130, 131)**

என்ற வரியின் மூலம் விதவை மறுமணம் குறித்து அறியமுடிகிறது.

**ஆணாதிக்கம்**

குடும்பக்கட்டமைப்பில் ஆணுக்கு முன்னுரிமை, முடிவெடுக்கும் அதிகாரம் மற்றும் பெண்ணைக் கட்டுப்படுத்தும் தன்மையும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்கள் பெண்களை தனக்கு கீழ் வைத்திருப்பதையே எண்ணுகின்றனர். அம்பை தன் படைப்பில் ஆணாதிக்கவாதிகளின் போக்கினை எடுத்துரைக்கின்றார். **சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை** என்ற சிறுகதையில்,

> **நாப்பது வயசானா நாய்க்குணம் இந்த ஆம்பிளைகளுக்கு என்று அலுத்துக்கொள்வார் அம்மா. அவருக்கு எண்பது வயதுக்கு மேல் ஆகிவிட்டது. நாற்பது வயதுக்கு மேல் என்றால் நாற்பது வருடங்களுக்கு மேலாகவா அம்மா இதைப் பொறுத்துக் கொண்டிருக்கிறாள் என்று தோன்றும். அவரை விட நான்கு வயது சிறியவள் அவ்வளவுதான். ஆனால் அவள் ஓடி ஓடிச் சமைத்துக் கொண்டும், புத்தகங்களைப் படித்துக் கொண்டும் இருந்தாள்.**
>
> **(சி.க.ஒ.ப.ப.ப.61)**

என்ற வரிகளின் மூலம் ஆண்களின் பல செயல்களுக்கு பெண்கள் பொறுமையாக காலம் கடக்க வேண்டியுள்ள நிலை இருப்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

- பெண்கல்வியின் அவசியம் மற்றும் கல்வி பெற்ற பெண்களின் நிலைக் குறித்தும் பெண்கள் தங்கள் இலட்சியத்தை அடைய எவ்வித தடையையும் தாண்டி செயல்படவேண்டும் என்பதையும் உணரமுடிகிறது.
- சமூகத்தில் நடக்கும் தீய்மைகளுக்கு எதிராக குரல் கொடுப்பவர்களாகப் பெண்கள் இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. பெண் தொழிலாளர்களுக்கான உரிமைகள் குறித்தும் அவற்றை பெண்கள் பெற வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- பெண்கள் உடல் அளவிலும் மனதளவிலும் பலம் வாய்ந்தவர்கள் என்பதை தெரிந்து கொள்ள முடிகின்றது. இன்றைய நவீன சமுதாயத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து

குடும்ப பொருளாதாரத்தில் பங்கெடுப்பவர்களாக விளங்குவதைக் காணமுடிகின்றது.

**அடிக்குறிப்பு**

1. இரா.பிரேமா, பெண்ணியம், ப.11
2. கா.வாசுதேவன், பன்முக நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.246
3. மு.வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப.2
4. தமிழண்ணல்(உ.ஆ), திருக்குறள், குறள்.247
5. மைதிலி சிவராமன், பெண்ணுரிமை – சில பார்வைகள், ப.16
6. இரா.பிரேமா, பெண் மரபிலும் இலக்கியத்திலும், ப. 75